# Winmeen - Group 4 VAO General Tamil Model Test 11

1. “மானிட மேன்மையைச் சாதித்திடக் – குறள்
   மட்டுமே போதுமே ஓதி, நட… “
   இவ்வரிகள் இடம்பெற்றுள்ள நூல்
   A) திருவள்ளுவமாலை B) தமிழோவியம்
   C) பிங்கல நிகண்டு D) நன்னூல்
2. "குறம் என்றும் பள்ளு என்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு
   உறவு என்று மூன்று இனத்தும் உண்டோ “
   இதில் கூறப்படும் மூன்று இனங்கள் எவை?
   A) துறை, தாழிசை, விருத்தம் B) குறம், பள்ளு, பா
   C) செறிவு, சமநிலை, தெளிவு D) சத்துவம், இராசசம், தாமசம்
3. பொருத்துக
   1. இரும்போந்து i) பருத்த பனைமரம்
   2. சந்து ii) சந்தன மரம்
   3. நாகம் iii) நாகமரம்
   4. காஞ்சி iv) ஆற்றுப்பூவரசு

| | | | | |
|---|---|---|---|---|
| A) | i | ii | iii | iv |
| B) | iii | ii | i | iv |
| C) | iv | iii | ii | i |
| D) | iii | ii | iv | i |

4. சான்றோர் தெளிவாய் ஆராய்ந்து தெளிந்த பொருள்களைப் பிறர்க்குப் பயன்படுமாறு எடுத்துரைப்பது _____ துறை .
   A) இயன் மொழித் துறை B) பொதுவியல் துறை
   C) பொருண்மொழிக் காஞ்சித் துறை D) பாடாண் துறை
5. கீழ்க்கண்டவற்றுள் கூட்டு வினைகளின் மூன்று வகைகள் யாவை?
   1. பெயர்+ வினை = வினை 2. வினை + வினை = வினை
   3. இடை + வினை = வினை 4. இடை + இடை = வினை
   A) 1, 2, 3 B) 2, 3, 4
   C) 1 , 3, 4 D) 1, 2,4
6. சிலப்பதிகாரத்தில் பட்டிமண்டம் என்ற சொல் எத்தனையாவது காதையில் இடம்பெற்றுள்ளது ?
   A) காதை 1 - அடி 102 B) காதை 41 - அடி 16
   C) காதை 5 - அடி 102 D) காதை 6 - அடி 102
7. சரியான இணையைத் தேர்ந்தெடு
   1. கடைபிடித்தல் –பின்பற்றுதல்

2. கடைப்பிடித்தல் – கடையைப்பிடித்தல்

A) அனைத்தும் சரி B) 1 மட்டும் சரி

C) 2 மட்டும் சரி D) இரண்டும் தவறு

8. பகுபத உறுப்புகளாகப் பிரித்து எழுதுக – பொருத்துங்கள்

A) பொருத்து + உங்கள் B) பொருத்து + உம் + கள்

C) பொரு+த் + உங்கள் D) பொரு + து + உங்கள்

9. கீழ்க்கண்ட வளர்மதி அவர்கள் குறித்த கூற்றுகளில் தவறானது எது?

A) வளர்மதி அவர்கள் அரியலூரில் பிறந்தவர் .

B) 2014ல் இவர் தமிழ்நாடு அரசின் அப்துல்கலாம் விருதை பெற்றார்.

C) இஸ்ரோவில் 1984 முதல் பணியாற்றி வருகிறார்.

D) 2012ல் உள்நாட்டிலேயே உருவான முதல் ரேடார் இமேஜிங் செயற்கைக்கோள் திட்டத்தின் இயக்குநராகப் பணியாற்றினார்.

10. பொருத்துக

1. முத்துலெட்சுமி i) உயர்வு
2. பண்டித ரமாபாய் ii) புரட்சி
3. இராமாமிர்தம் iii) துணிவு
4. ஐடாஸ் சோபியா ஸ்கட்டர் iv) அறிவு
5. சாவித்திரிபாய் பூலே v) சிறப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| A) | iii | i | ii | v | iv |
| B) | iii | ii | i | iv | v |
| C) | ii | i | iii | v | iv |
| D) | i | ii | iii | iv | v |

11. சாரதா சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு

A) 1919 B) 1939 C) 1929 D) 1949

12. தாமிரபரணி ஆறு கடலில் கலக்கும் இடத்தில் மேற்குக்கரையில் அமைந்த துறைமுகம் எது ?

A) முசிறி B) கொற்கை

C) தொண்டி D) காவிரிப்பூம்பட்டினம்

13. “பாரதி போதிச்ச பாடசாலை – திருப்
பரங்குன்ற முருகன் நின்னசோலை "
என்ற வரிகள் எந்த கவிதையில் இடம்பெற்றுள்ளன

A) மதுரைக் காஞ்சி B) நான்மாடக்கூடல்

C) காவடிச் சிந்து D) நொண்டிச்சிந்து

14. ஒரு பாறையில் 24 தீர்த்தங்கரர் உருவங்கள் புடைப்பு சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ள இடம்

A) மதுரை B) திருநாதர்குன்று

C) திருப்பரங்குன்றம் D) வேலூர்

15. இலக்கணக் குறிப்புத் தருக - மலர்க்கண்ணி

A) 2 ம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

B) 3ம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

C) 4ம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

D) 5ம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

16. "சொல்அரும் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்

மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார் "

இவ்வரிகள் இடம்பெற்றுள்ள நூல்

A) சிலப்பதிகாரம் B) மணிமேகலை

C) சீவக சிந்தாமணி D) வளையாபதி

17. இலக்கணக் குறிப்புத் தருக – இறைஞ்சி

A) பெயரெச்சம் B) வியங்கோள் வினைமுற்று

C) வினையெச்சம் D) வினைத்தொகை

18. 'பெருமரத்துடன் போட்டியிடுகிறது' என்று ந. பிச்சமூர்த்தி அவர்கள் குறிப்பிடும் மரம் எது?

A) கமுகு B) தென்னை

C) பனை D) மூங்கில்

19. ந.பிச்சமூர்த்தி அவர்கள் கீழ்க்கண்ட எந்த துறைகளில் பணியாற்றினார்?

1. வழக்குறைஞர்
2. ஆசிரியர்
3. உயர்நீதிமன்ற நீதிபதி
4. இந்து சமய அறநிலையப் பாதுகாப்புத்துறை அலுவலர்

A) 1, 2 B) 1, 3

C) 1, 2, 3 D) 1, 4

20. " பண்புடைமையாவது யாவர்மாட்டும் அவரோடு அன்பினராய்க் கலந்து ஒழுகுதலும், அவரவர் வருத்தத்திற்குப் பரிதலும் பகுத்து உண்டலும் பழி நாணலும் முதலான நற்குணங்கள் பலவும் உடைமை" என்று பண்புடைமை அதிகாரத்திற்கு உரை எழுதியவர் யார்?

A) மல்லர் B) மணக்குடவர்

C) பரிப்பெருமாள் D) பரிதி

21. "நசை பெரிது உடையர்; நல்கலும் நல்குவர்

பிடிபசி களைஇய பெருங்கை வேழம்...."

என்பது குறுந்தொகையில் எத்தனையாவது பாடல்?

A) 27 B) 28 C) 37 D) 38

22. விரைந்து கெடுபவன் யார்?.

A) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைப்பவன்

B) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்

C) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்

D) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைப்பவன்

23. ஆர் .பாலகிருஷ்ணன் அவர்கள் துணையாசிரியராக பணியாற்றிய நாளிதழ்

A) கணையாழி B) தினமணி

C) அ, ஆ இரண்டும் D) தினமலர்

24. "நூபுரத்துத் தொனி வெடிக்கும் – பத
நுண்ணிடை மாதர்கள் நடிக்கும் "
- இவ்வரிகள் இடம்பெற்றுள்ள பாடல்

A) திருமலை முருகன் பள்ளு B) காவடிச் சிந்து

C) ஐங்குறுநூறு D) சிலப்பதிகாரம்

25. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது

A) தனிப்பட்ட மூளை கனத்துக்கும் புத்திசாலித்தனத்துக்கும் உறவில்லை.

B) மூளை அளவுக்கும் உடல் அளவுக்கும் உள்ள உறவு முக்கியமல்ல.

C) தேனீக்களின் மூளைக்கு 100 மைக்ரோ வாட் சக்தி தேவைப்படுகிறது.

D) மனித மூளையானது முன் மூளை, பின் மூளை, சிறு மூளை என 3 பகுதிகளாக பிரிக்கப்படுகிறது.

26. " மனிதனின் பேச்சுத் திறமை, மனித மூளையின் இடது முன் பகுதி சுளையில் இருக்கிறது " என்று ப்ரோக்கா கண்டறிந்த ஆண்டு

A) 1861 B) 1881 C) 1886 D) 1868

27. "உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும், பிள்ளை நிலை முனியாது கற்றல் நன்றே " என்று கூறும் நூல்

A) புறநானூறு – 188 B) புறநானூறு – 183

C) அகநானூறு – 188 D) அகநானூறு – 183

28. பொதுக் கல்வி துறை நிறுவப்பட்டு முதல் பொதுக் கல்வி இயக்குநர் நியமிக்கப்பட்ட ஆண்டு

A) 1826 B) 1835 C) 1854 D) 1857

29. புதுச்சேரிப் பட்டணத்திற்குள்ளேயும், சம்பாக் கோவிலுக்கு தெற்காக போகிற உப்பங்கழி இடத்திலும் வீதிகளிலும் காலைக் கடன் கழிப்பவர்களிடம் ஆறு பணம் தண்டம் விதிக்கப்படும் என ஆணை பிறப்பித்தவர்

A) துய்ப்ளே B) துய்மா

C) டூமாஸ் D) லெபூர் தொனே

30. "தமிழ்த்தாய் நெருப்பினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டாலும் அவளது ஆபரணங்கள் தொலைவில் உள்ள நகரமான பாரீசில் மிகவும் பாதுகாப்பாக பராமரிக்கப்படுகின்றன" என்று ஆனந்தரங்கர் நாட்குறிப்பு குறித்துக் கூறியவர்

A) அண்ணா B) திரு.வி.க

C) உ.வே.சா D) வ.வே.சு

31. "கட்டடக்கலை என்பது உறைந்து போன இசை" என்று கூறியவர்

A) பிரடிரிகா வொன்ஸ்லீவிங் B) முதலாம் நரசிம்மவர்மன்

C) கோவிந்தசாமி D) இராசசிம்மன்

32. சுண்ணாம்புக் காரைப் பூச்சு மீது அதன் ஈரம் காயும் முன் வரையப்படும் பழைமையான ஓவியக் கலை நுட்பம் _____ எனப்படும்.

A) ஃபாஸ்ட் ஓவியங்கள்
B) ஃப்ரெஸ்கோ ஓவியங்கள்
C)ஃப்ரஷ் ஓவியங்கள்
D) மேற்கண்ட எதுவுமில்லை

33. கீழ்க்கண்டவற்றுள் சுந்தர ராமசாமி அவர்கள் எழுதிய சிறுகதைகள் எவை?

1. ரத்னா பாயின் ஆங்கிலம்
2. ஒரு புளியமரத்தின் கதை
3. செம்மீன்
4. காகங்கள்

A) அனைத்தும் சரி
B) 1, 2, 4
C) 1, 2, 3
D) 1, 4

34. " அழைத்தான் →அழை + த் + த் + ஆன் "

இதில் ' த் + த்' என்பதன் பகுபத உறுப்பிலக்கணம் முறையே

A) இறந்தகால இடைநிலை, சந்தி
B) சந்தி, இறந்தகால இடைநிலை
C) சாரியை, இறந்தகால இடைநிலை
D) இறந்தகால இடைநிலை, சாரியை

35. "உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேராதியல்வது நாடு " என்று கூறியவர் யார்?

A) பாரதிதாசன்
B) குமட்டூர்க் கண்ணனார்
C) திருவள்ளுவர்
D) ஔவையார்

36. கீழ்க்கண்டவற்றுள் குண்டலினி சக்தியை உச்சியில் ஏற்றி அமுதம் உண்ணும் நிலையைக் கூறும் சொல் எது?

A) குண்டலினி சக்தி
B) அமுதம்
C) மாங்காய்ப் பால்
D) அமுதப்பால்

37. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | ஈசத்துவம் | i) படைக்கவும் அடக்கவும் கொண்ட ஆற்றல் |
| 2. | பிராகாமியம் | ii) இயற்கைத் தடைகளைக் கடக்கும் ஆற்றல் |
| 3. | காமாவசாயித்வம் | iv) விரும்பியதை முடிக்கும் ஆற்றல் |
| 4. | வசித்வம் | v) உலகப்படைப்புகளை அடக்கி ஆளும் ஆற்றல் |

| | | | | |
|---|---|---|---|---|
| A) | i | ii | iii | iv |
| B) | ii | i | iv | iii |
| C) | iv | iii | ii | i |

D) iv ii iii i

38. "நிற்கின்றாய் → நில் ( ற் ) + கின்று + ஆய் " என்பதில் 'ஆய்' என்பதன் பகுபத உறுப்பிலக்கணம் ?

A) முன்னிலை பன்மை வினை முற்று விகுதி

B) முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

C) தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

D) படர்க்கை ஒருமை வினைமுற்று விகுதி

39. இலக்கணக் குறிப்புத் தருக .

உருட்டி, ஏகுமின்

A) பெயரெச்சம், வினையெச்சம்

B) வினையெச்சம், பெயரெச்சம்

C) வினையெச்சம், ஏவல் பன்மை வினைமுற்று

D) பெயரெச்சம், ஏவல் பன்மை வினைமுற்று

40. இலக்கணக் குறிப்புத் தருக

வாய்க்கால், ஏகுதி

A) உரிச்சொற்றொடர் , வினையெச்சம்

B) பெயரெச்சம், வினையெச்சம்

C) இலக்கணப்போலி, ஏவல் ஒருமை வினைமுற்று

D) பெயரெச்சம், ஏவல் ஒருமை வினைமுற்று

41. "ஈறுபோதல், ஆதி நீடல், இணையவும், உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே" என்னும் விதிகளின் படி புணர்ந்து வரும் சொல் எது?

A) பேரழகு B) காலத்தச்சன்

C) உழுதுழுது D) சென்ற

42. பொருத்துக.

| | |
|---|---|
| 1. பியர் பால் ப்ரோக்கா | i) பிரெஞ்சு சர்ஜன் |
| 2. நோம் சோம்ஸ்கி | ii) அமெரிக்க உளவியல் மொழியியலாளர் |
| 3. ஆட்டோ டியட்டர்ஸ | iii) ஜெர்மானியர் |
| 4. க்வாபெனா போஹென் | iv) ஸ்டான்போர்டு பேராசிரியர் |

A) i ii iii iv

B) iii i ii iv

C) ii i iii iv

D) ii i iv iii

43. காஞ்சிபுரத்திலுள்ள பௌத்தப் பல்கலைக்கழகத்தில் தங்கி சிறப்புரை ஆற்றிய வெளிநாட்டுப் பயணி

A) மெகஸ்தனிஸ் - சீன பயணி

B) மெகஸ்தனிஸ் - இத்தாலிய பயணி

C) யுவான் சுவாங் – இத்தாலிய பயணி

D) யுவான் சுவாங் – சீனப் பயணி

44. மூக்கு, கண் இவற்றின் முடிவுகள் உள்ள மூளையின் பாகம்

A) முன்மூளை B) பின் மூளை

C) நடு மூளை D) முதுகுத் தண்டு

45. புதுச்சேரியிலிருந்து _______க்கு சென்ற கப்பலில் அழகப்பன் என்ற தமிழ் மாலுமி பணியாற்றியதாக ஆனந்தரங்கர் குறிப்பிடுகிறார்.

A) இங்கிலாந்து B) மணிலா

C) போர்ச்சுக்கல் D) இலங்கை

46. செங்கல், சுண்ணம், மரம், உலோகம் இல்லாமலே பிரம ஈசுவர விஷ்ணுக்களுக்கு குடைவரைக் கோயில்களை விசித்திர சித்தன் என்பவர் அமைத்தார் எனக் கூறும் கல்வெட்டு

A) அரிக்கமேடு கல்வெட்டு B) மண்டகப்பட்டு கல்வெட்டு

C) மகாபலிபுரம் கல்வெட்டு D) சித்தன்னவாசல் கல்வெட்டு

47. வடமொழியில் " மலய " என்ற சொல் எப்பகுதியில் உள்ள மலைகளை குறிக்கிறது

A) மலபாருக்கு கிழக்கே உள்ள மலைகளை B) மலபாருக்கு மேற்கே உள்ள மலைகளை

C) மலபாருக்கு வடக்கே உள்ள மலைகளை D) மலபாரை சுற்றியுள்ள மலைகளை

48. சரியான பொருளைத் தேர்ந்தெடு

மடிவு , வட்டம்

A) மடிப்பு , எல்லை B) சோம்பல் , எல்லை

C) மடிப்பு , உருவம் D) பணிவு ,எல்லை

49. முதிர்ந்த ஆளுமைக்கு மூன்று இலக்கணங்கள் இன்றியமையாதவை என்று கூறியவர் யார்?

A) காந்தி B) நேரு

C) தெறென்ஸ் D) கோர்டன் ஆல்போர்ட்

50. தெலுங்கு , கன்னடப் பகுதிகளின் சிற்பக் கலை தாக்கம் தமிழக சிற்பக் கலையில் யாருடைய காலத்தில் ஏற்பட்டது .

A) சோழர்கள் காலம் B) பாண்டியர்கள் காலம்

C) நாயக்கர் காலம் D) விஜயநகர மன்னர் காலம்

51. சரியானவற்றைக் காண்க

1. யான்+கு= எனக்கு

2. யான்+ கண்= என்னின்கண்

3. யான்+அது= என்னது

4. யான்+ஆல்= என்னால்

A) 2, 3 சரி B) 1, 2 சரி

C) 1, 4 சரி D) நான்கும் சரி

52. அறவண அடிகள் ‘அறிவுண்டாகுக’ என யாரை எல்லாம் வாழ்த்தினார்?

A) அரசமாதேவி, தோழியர் கூட்டம் B) சித்திராபதி

C) மணிமேகலை D) அனைவரையும்

53. 'சாதியும் மதமுஞ் சமயமுந் தவிர்ந்தேன் சாத்திரக் குப்பையும் தணந்தேன்' - எனப் பாடியவர்

A) திருமூலர்
B) பெரியார்
C) வள்ளுவர்
D) வள்ளலார்

54. 'Charity begins at home' என்பதற்கு இணையான தமிழ்ப் பழமொழி
A) தன்கையே தனக்குதவி
B) அறநிலையம் வீட்டிலேயே துவக்கம்
C) தனக்கு மிஞ்சியே தானமும் தருமமும்
D) வீட்டிலேயே தானம் செய்

55. பெருமாள் திருமொழியில் _______ பாசுரங்கள் உள்ளன.
A) இருநூற்றைந்து
B) நூற்றைந்து
C) நூறு
D) பதினெட்டு

56. "எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவது சமத்துவம்" என்றவர்
A) பெரியார்
B) அண்ணல் அம்பேத்கர்
C) காந்தியடிகள்
D) திரு.வி.க

57. பின்வரும் இலக்கணக் குறிப்புக்குப் பொருந்தாதச் சொல்லைத் தேர்ந்தெடுக்கவும்.
வினைத்தொகை
A) பொங்குதாமரை
B) பூதரப்புயம்
C) அலைகடல்
D) அகல்முகில்

58. ஒருமை பன்மை பிழைகளை நீக்குக
நான் வாங்கிய நூல் இது அல்ல
A) நான் வாங்கிய நூல் இஃது அல்ல
B) நான் வாங்கிய நூல் இஃது அன்று
C) நான் வாங்கிய நூல் இது அன்று
D) நான் வாங்கின நூல் இது அன்று

59. "நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று " என்று
தலைவி தலைவன் மீதான நட்பை வியந்து பாடுவதாய் அமைந்த பாடலின் நூல்
A) நற்றிணை
B) ஐங்குறுநூறு
C) குறுந்தொகை
D) அகநானூறு

60. திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்துக்கு முதனூலாக அமைந்தது எது?
A) திருத்தொண்டத்தொகை
B) திருவாசகம்
C) திருமந்திரம்
D) திருக்கோவையார்

61. சுருதிமுதல் - என்ற சொல்லின் பொருள் யாரைக் குறிக்கின்றது?
A) யூதர்
B) இயேசு நாதர்
C) சீடர்
D) குற்றவாளி

62. திரு.வி.க வின் செய்யுள் நூல்கள்
1. உரிமை வேட்டல்
2. சைவத்திறவு
3. பொருளும் அருளும்
4. கடவுட்காட்சியும் தாயுமானவரும்
A) 2, 3 – சரி
B) 1, 2 சரி
C) 1, 3 சரி
D) நான்கும் சரி

63. எழுத்து என்பதற்கு ஓவியம் எனப் பொருள் கூறும் நூல்கள்
A) நற்றிணை, குறுந்தொகை
B) அகநானூறு, புறநானூறு
C) பரிபாடல், குறுந்தொகை
D) குறுந்தொகை, புறநானூறு

64. பின்வரும் இலக்கணக் குறிப்புக்குப் பொருந்தாதச் சொல்லைத் தேர்ந்தெடுக்கவும்.
உரிச்சொற்றொடர்
A) நெடுநாவாய்
B) நனி கடிது

C) நன்னுதல் D) நின்கேள்

65. உடற்பிணியைப் போக்கும் மருத்துவ நூல்கள் இயற்றிய சித்தர்கள்

1. அகத்தியர்

2. தேரையர்

3. போகர்

4. புலிப்பாணி

A) 1, 4 சரி B) 1, 3, 4 சரி

C) 2, 4 சரி D) 1, 2, 3, 4 சரி

66. விடைக்கேற்ற வினாவைக் கண்டறிக.

திரைப்படம் எடுப்பதனைவிடச் செய்திப்படம் எடுப்பது கடினமான பணியாகும்.

A) திரைப்படம் எடுப்பதனைவிட எப்படம் எடுப்பது கடினமான பணியாகும்?

B) திரைப்படம் எடுப்பதனைவிட எந்தப் படம் எடுப்பது கடினமான பணியாகும்?

C) திரைப்படம் எடுப்பதனை விட கடினமான பணி எது?

D) திரைப்படம் எடுப்பதனைவிட எவ்வகைப்படம் எடுப்பது கடினமான பணியாகும்?

67. கொடுக்கப்பட்ட சொற்களுள் சரியான மரபுச் சொல்லைத் தேர்க

A) மான்குட்டி B) சிங்கக் குருளை

C) கீரிக்குட்டி D) கழுதை கன்று

68. பழைய இலக்கிய வழக்கில் சொல்லின் இறுதி எழுத்தாக வந்து தற்போது வழக்கில் இல்லாத எழுத்துக்கள்

A) ஞ், ந், வ் B) ஞ், ண், ந்

C) ஞ், ண், ன் D) ஞ், ன், ழ்

69. 'ங்' என்னும் மெல்லின மெய் 'ஙனம்' என்னும் சொல்லில் கீழ்க்கண்ட எந்த பொருளில் வரும்

A) வீதம் B) விதம்

C) அங்கு D) இங்கு

70. தமிழ் அகதிகள் கனடாவுக்கு குடிபெயரத் தொடங்கிய ஆண்டு

A) 1958 B) 1938 C) 1982 D) 1983

71. "ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்

நாற்றிசையும் செல்லாத நாடில்லை"

என்ற வரிகளை இயற்றியவர்

A) ஔவையார் B) முன்றுறை அரையனார்

C) சமண முனிவர்கள் D) கம்பர்

72. தவறான இணையைத் தேர்ந்தெடு

A) மில்டன் - ஆங்கிலக் கவிஞர்

B) பிளேட்டோ – கிரேக்கச் சிந்தனையாளர்

C) பெர்னார்ட் ஷா - ஆங்கில நாடக ஆசிரியர்

D) டால்ஸ்டாய் – ஆங்கில நாடக ஆசிரியர்

73. "அறிவு என்பது வளர்ந்து கொண்டே இருக்கும்; எனவே, புதியவற்றை ஏற்க வேண்டும்" என்று கூறியவர் யார்?

A) அம்பேத்கர் B) பெரியார்

C) அம்புஜத்தம்மாள் D) நேரு

74. "ஆங்கிலமோ பிறமொழியோ பயின்றுவிட்டால் அன்னை
மொழி பேசுவதற்கு நாண்கின்ற தீங்குடை மனப்போக்கர் வாழும்
நாட்டில் தென்படுமோ மொழியுணர்ச்சி" என்று கூறியவர்
A) ந.பிச்சமூர்த்தி B) முடியரசன்
C) மீரா D) கண்ணதாசன்

75. கரிகாலன் முன்னோர் காற்றின் போக்கினை அறிந்து கலம் செலுத்தினர் என்று கூறும் நூல்
A) புறநானூறு B) பதிற்றுப்பத்து
C) பட்டினப்பாலை D) மதுரைக்காஞ்சி

76. இந்தியாவில் எத்தனை மொழி குடும்பங்கள் உள்ளன? அவற்றுள்
எத்தனை மொழிகள் பேசப்படுவதாக இந்திய மானுடவியல் கணக்கெடுப்பு தெரிவிக்கிறது.
A) 12, 353 B) 12, 325
C) 13, 325 D) 12, 353

77. கரிசலாங்கண்ணி குணமாக்கும் நோய்களில் சரியானது எது?
1. இரத்தசோகை
2. நரையை போக்கும்
3. செரிமான கோளாறு
4. மஞ்சள் காமாலை
5. கண்பார்வை
A) 1, 2, 5 சரி B) 2, 3, 4 சரி
C) 2, 4, 5 சரி D) அனைத்தும் சரி

78. வெறியாட்டுப்பறை, தொண்டகப்பறை ஆகியவை எந்நிலத்துடன் தொடர்புடையது
A) குறிஞ்சி B) முல்லை
C) மருதம் D) நெய்தல்

79. வடக்கு என்னும் திசைப்பெயரோடு பிற திசைகள் வந்து சேரும் போது
A) நிலைமொழி ஈறு நீங்கும் B) நிலைமொழி ஈறும் மெய்யும் நீங்கும்
C) வருமொழி முதல் கெடும் D) நிலைமொழி முதல் கெடும்

80. கீழ்க்கண்டவற்றுள் தாராபாரதி எழுதாத நூலினைத் தேர்ந்தெடு
A) புதிய விடியல்கள் B) விரல்நுனி வெளிச்சங்கள்
C) பூமியைத் திறக்கும் பொன்சாவி D) இமயம் எங்கள் காலடியில்

81. பெண்களின் தெரிவை பருவ வயது
A)8 – 11 B) 12 – 13
C) 20 – 25 D) 26 – 32

82. இணையத்திற்கு வித்திட்ட ஜான்பாஸ்டல் என்பவர் எந்த நாட்டை சேர்ந்தவர்
A) சுவிட்சர்லாந்து B) இங்கிலாந்து
C) பிரான்சு D) அமெரிக்கா

83. தில்லியிலுள்ள திகார் சிறைச்சாலையின் நிலைப்பற்றி கண்டறிந்து வெளியிட்டப் பத்திரிக்கை
A) தி இந்து B) இண்டியன் எக்ஸ்பிரஸ்
C) லண்டன் டைம்ஸ் D) இண்டியன் டைம்ஸ்

84. மீசைக்கும் கூழுக்கும் ஆசைப்பட்டு மேல் விழுந்து பாடுபவன் கவிஞன் அல்லன் என்று பாடியவர்
A) பாரதிதாசன் B) முடியரசன்
C) சச்சிதானந்தன் D) பாரதியார்

85. செல்வமும், உழைப்பும் இல்லாத கல்வி களர்நிலம் என்று கூறியவர்
A) அம்பேத்கர் B) காமராசர்
C) பெரியார் D) காந்தியடிகள்

86. செய்வாயா? என்னும் வினாவிற்கு கை வலிக்கும் எனத் தனக்கு வரப்போவதனை கூறுவது
A) இனமொழி விடை B) உறுவது கூறல் விடை
C) உற்றதுரைத்தல் விடை D) வினா எதிர்வினாதல் விடை

87. திருவாசகத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை____
A) 568 B) 865 C) 685 D) 658

88. பனை மரத்திலிருந்து விழுந்து பிழைத்தவனும் உண்டு வயல் வரப்பில் வழுக்கி விழுந்து இறந்தவனும் உண்டு என்று கூறியவர்
A) வள்ளலார் B) முத்துராமலிங்க தேவர்
C) பெரியார் D) காமராஜர்

89. ஊரும் பேரும், தமிழினம் என்ற நூலை எழுதியவர்
A) மீனாட்சி சுந்தரனார் B) ரா.பி.சேதுப்பிள்ளை
C) உ.வே.சா D) பாவாணர்

90. ஆர்கலி உலகத்து என ஒவ்வொரு பத்துப் பாடல்களுக்கும் ஒருமுறை தொடங்குவது
A) முதுமொழிக் காஞ்சி B) முதுமொழி மாலை
C) முகுந்த மாலை D) பழமொழி நானூறு

91. காந்தியடிகள் தலைமையேற்ற இலக்கிய மாநாடு சென்னையில் எப்போது நடைபெற்றது
A) 1935 B) 1937 C) 1939 D) 1940

92. காந்தியடிகளிடம் உடை அணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர்
A) கோவை B) மதுரை
C) தஞ்சாவூர் D) சிதம்பரம்

93. எந்த இடத்தில் நடைபெற்ற போரில் முத்து வடுகநாதர் ஆங்கிலப் படையுடன் போரிட்டு வீர மரணம் அடைந்தார்?
A) இராமநாதபுரம் B) திருநெல்வேலி
C) திண்டுக்கல் D) காளையார்கோவில்

94. சரியான பொருளைத் தேர்ந்தெடு.
பூதலம், கும்பி
A) மலர், மழை B) சோலை, வயிறு
C) பூமி, வயிறு D) பூமி, மழை

95. "பூதலந் தன்னை நரகம் அது ஆக்கிடும்
புத்தியை விட்டுப் பிழையும் ஐயா" என்ற பாடலை இயற்றியவரின் காலம்
A) 18ம் நூற்றாண்டு B) 19ம் நூற்றாண்டு
C) 20ம் நூற்றாண்டு D) சங்க காலம்

96. "தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு – அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி"
என்ற பாடலை பாடியவர்
A) பாரதிதாசன் B) கவிமணி
C) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார் D) நாமக்கல் கவிஞர்

97. தமிழன் என்ற சொல் முதலில் ஆளப்பட்ட இலக்கியம் எது?

A) தொல்காப்பியம் B) சிலப்பதிகாரம்

C) மணிமேகலை D) அப்பர் தேவாரம்

98. ‘இடப்புறம்’ என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல் ______.

A) இடது + புறம் B) இடன் + புறம்

C) இட + புறம் D) இடப் + புறம்

99. 'நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின் " எனக் கூறும் நூல்

A) கார்நாற்பது B) தொல்காப்பியம்

C) பதிற்றுப்பத்து D) நற்றிணை

100. தவறான இணையைத் தேர்ந்தெடு

A) கொங்கு – தேன் B) திகிரி – ஆணைச் சக்கரம்

C) அளி – கருணை D) நாமநீர் -அச்சம் தரும் கடல்

winmeen.com

# Group 4 VAO General Tamil Model Test 11 – Answer Key

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| B | A | A | C | A | C | D | B | B | C |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| C | B | B | B | B | C | C | A | D | C |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| C | D | B | B | A | A | B | C | B | C |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| A | B | D | B | C | C | A | B | C | C |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| A | A | D | A | B | B | B | B | D | D |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| C | D | D | C | B | B | B | B | C | A |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| B | C | C | B | D | A | B | A | B | D |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| B | D | B | B | A | B | D | A | B | D |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| D | A | B | B | A | B | D | B | B | A |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | 100 |
| B | B | D | C | C | B | D | A | B | A |